# தமிழர் விடுதலைக் கூட்டணி
# දෙමළ එක්සත් විමුක්ති පෙරමුණ
# TAMIL UNITED LIBERATION FRONT

Telephone: (9411) 2347721
Fax: (9411) 2384904

30/1B, Alwis Place,
Colombo-03. Sri Lanka.


01.08.2008

**மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங்,**
**இந்திய பிரதம மந்திரி**

**அன்புடையீர்,**

தமிழர் விடுதலைக் கூட்டணி. தமிழீழமக்கள் விடுதலைக்கழகம், பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (TULF, PLOTE, P- EPRLF) ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி கீழே ஒப்பமிட்டிருக்கும் நாங்கள், தங்களை சந்திக்கும் வாய்ப்பை தந்தமைக்கு நன்றி கூறுகின்றோம். எமது மூன்று கட்சிகளும் ஒரு பொது திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை சரித்திரத்தில் முன் எப்போதும் நடந்திராத வகையில் நடந்தேறிய 1983 ஜுலை இனக்கலவரத்துடன் இனப்பிரச்சினை தீவிரமடைந்த போது ஆயுதந்தாங்கிய அமைப்புக்கள் உட்பட தமிழ் தலைவர்கள், இந்தியா தலையிட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வை காண வேண்டும் என கேட்டுக்கொண்டனர். மாண்புமிகு திருமதி இந்திராகாந்தி அவர்கள் இந்தியா சென்ற இலங்கை தமிழர்களுக்கு புகலிடமளித்ததுடன் தமிழ் தலைவர்களுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல்களையும் மேற்கொண்டார். இந்தியாவின் பிரதம மந்திரி என்ற வகையில் அம்மையார் அவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்கள் சார்பில் இலங்கை அரசோடு பல சுற்றுப் பேச்சுக்களை நடாத்த ஏற்பாடு செய்தார். திருமதி இந்திராஜியின் அகால மரணம் பேச்சுவார்த்தையில் ஒரு சிறு தளர்வை ஏற்படுத்திய போதும் இனப்பிரச்சினை தீர்வில் இந்திய அரசின் பங்கெடுப்பு மாட்சிமை தங்கிய ராஜிவ் காந்தி அவர்கள் இந்தியாவின் பிரதம மந்திரி ஆகியதும் புத்துயிர் பெற்றது. இனப்பிரச்சினை தீர்வுக்கு திருமதி இந்திராஜி அவர்கள் காட்டிய அதே போன்ற உற்சாகத்தை காட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியை ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தலைமையிலான இலங்கை அரசோடு பல சுற்றுக்கள் பேச்சுவார்த்தைகள் நடாத்த காரணமாயிருந்தார்.

பல்வேறு மட்டத்தில், பல சுற்று பேச்சுவார்த்தைகளின் பின் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதியின்படி இந்திய அரசியல் நிபுணர்களுடன் இலங்கையின் நிபுணர்கள் பேசி தீர்வு காண்பார்கள் என்ற வாக்குறுதியை மீறி இலங்கை அதிகாரிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தை நடாத்தி மாகாண சபைகள் அமைப்பதற்கும் அதிகாரப்பங்கீட்டை மேற்கொள்ளவும் அரசியல் சாசனத்தில் 13 வது திருத்தத்தை செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்ட உருவம் கொடுக்கப்பட்டது.

இவ்விரு சட்டங்கள் மூலம் கிடைத்த அதிகாரம் தமிழ் மக்களை ஏமாற்றமடையச் செய்தன. எல்லோரும் அறிந்த காரணத்தினால் 13 வது திருத்தச்சட்டம் முற்றுமுழுதாக அமுல் நடத்தப்படவில்லை.

மாண்புமிகு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களுடன் எத்தகைய தீர்வுக்கு உடன்பட்டாரோ அத்தகைய தீர்வை தாங்கள் ஏற்படுத்தி தர வேண்டும் என்று கோருகின்றோம். நாம் எதிர்பார்ப்பது ஒன்றுபட்ட இலங்கைக்குள் 13 வது திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்தோடு மேலும் சில அம்சங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதே.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாகிய ஜுலை 1987 ஆம் ஆண்டு இருந்த நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் பெரும் வேறுபாடு இருப்பதாக எமக்கு தெரியவில்லை. சில அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு எமக்கு குழப்பத்தையே தருகின்றது ஒற்றையாட்சி அரசியல் சட்டத்திற்குள் எட்டப்படும் எத்தகைய தீர்வும் நிலைத்திருக்காது என்பதே எமது பயமாகும். 1948 ஆம்

ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை சுதந்திரம் அடைந்த வேளை உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியல் சட்டத்திற்கு ஏற்பட்ட அதே கதி ஒற்றையாட்சியின் கீழ் ஏற்படும் தீர்வுக்கும் ஏற்படலாம். அன்றைய சட்டத்தில் சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட அம்சங்கள் 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் உருவாக்கப்பட்டபோது மீறப்பட்டது. இக்காரணத்தினாலேயே மாகாணசபைகளுக்கு இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதை ஒத்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றோம். இவ் எண்ணத்தையே மாண்புமிகு ராஜிவ் காந்தியும் கொண்டிருந்தார்.

வடகிழக்கு இணைப்பை பொறுத்த வரையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் இணைப்பை இரத்தாக்கும் பிரகடனத்தை செய்யலாம் என அன்று நாம் கொண்டிருந்த பயம் இன்று உச்ச நீதிமன்றத்தின் தீர்வால் நிருபிக்கப்பட்டுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் அவர்களின் கொடுங்கோல் ஆட்சிக்குள் எவரின் கற்பனைக்கும் எட்டாத துன்பங்களை தொடர்ந்து அனுபவித்து வருகின்றார்கள். அரச கட்டுப்பாட்டிலுள்ள கிழக்குமாகாணத்திலும் வடமாகாணத்திற் பொரும்பகுதியிலும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்வதனால் மக்கள் பயத்தோடும், பதட்டத்தோடும் வாழ்ந்து வருகின்றார்கள்.

எமது அபிப்பிராயப்படி யுத்தம் தொடர்வதை காரணம் காட்டி மக்களை அச்சத்துக்கும், அடக்குமுறைக்கும் ஆட்பட விடுவது நியாயமல்ல. குறைந்த பட்சம் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கேனும் அமைதியான இயல்புவாழ்வை வாழ சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும். நிரந்தர தீர்வுகண்டு நாடு பூராகவும் அமைதி திரும்பும் வரை எங்கெங்கு முடியுமோ அப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அவர்களுடைய துன்ப, துயரங்களை போக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**பின்வரும் நடவடிக்கைகள் மக்களுக்கு பூரண நிவாரணம் வழங்காது போனாலும் நிரந்தர தீர்வு காணும் வரை அன்றாட வாழ்க்கையில் அவர்களுடைய துன்பங்களை பொருமளவில் குறைக்க உதவும்.**

1. கிழக்கு மாகாணத்தில் 13 வது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரப்பகிர்வு பூரணமாக வழங்கப்படுவதோடு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

2. வட மாகாணத்தில், உண்மையான அக்கறை கொண்ட பல்வேறு அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டு 13 வது திருத்தச் சட்டததின் கீழான அனைத்து அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

3. இறுதி தீர்வு காணப்படும் வரை வடக்கு கிழக்கு மக்களின் மொழி மற்றும் காலாசார தொடர்புகளை மேம்படுத்தும் ஓர் இணைப்பு சபை உருவாக்கப்பட வேண்டும்.

4. நாடு பூராவும் குறிப்பாக வடக்கு கிழக்கில் ஜனநாயகமும், அரசியல் பன்மைத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5. யுத்தம் வலுவடைந்ததோடு பல்லாயிரக்கணக்கான மக்கள் தத்தம் வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்தமை அவர்களுக்கு சொல்லொணா கஸ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட இருசாராரும் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதோடு தேவையான நிவாரண உதவிகள் தடையின்றி அவர்களுக்கு கிடைக்க ஆவனசெய்ய வேண்டும்.

இறுதியாக புலிகள் ஒற்றையாட்சியின் கீழ் எத்தகைய தீர்வுக்கும் சம்மதிக்க மாட்டார்கள் என்பது வெளிப்படை. இருப்பினும் ஓர் தீர்வு காண்பதற்கு இவர்களின் இந்த நிலைப்பாட்டை சாதகமாக்கிக் கொள்ளக் கூடாது. எது எப்படியிருப்பினும் காணப்படும் இறுதித்தீர்வு சிறுபான்மை மக்களுக்கு ஏற்புடையதாக இருப்பதோடு எதிர்காலத்தில் எத்தகைய போராட்டத்திற்கும் இடமளிக்காத நிரந்தர தீர்வாக அமைய வேண்டும்.

நன்றியுடன்

வீ.ஆனந்தசங்கரி
தலைவர்
த.வி.கூ

த.சித்தார்த்தன்
தலைவர்
புளொட்

தி.ஸ்ரீதரன்
பொதுச் செயலாளர்
பத்மநாபா ஈபிஆர்எல்எவ்